**அசல் வழக்கு எண். 478/18 வா.சா.1 கண்ணகி க/பெ. சேகர்**

**தேதி 28.11.2022**

**<u>5 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எங்களுக்குரிய பாகத்தினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எனது தகப்பனார் வழியாக சேரக்கூடிய அனைத்து சொத்துக்காகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1 வது பிரதிவாதியான எனது தாயார் தனது சிறுவயதிலிருந்தே வால்பாறை ஊசிமலை எஸ்டேட்டில் வேலை பார்த்து வந்தார். எனக்கு திருமணமாகி 20 வருடங்கள் ஆகிறது. எனக்கு திருமணமாகும்போது எனது ஊசிமலை எஸ்டேட்டில்தான் இருந்தார். எனது தகப்பனார் பெயர் ரெங்கநாதன் ஆகும். எனது தகப்பானருடன் பிறந்தவர்கள் மொத்தம் ஆறுபேர். அதில் மூன்றுபேர் ஆண்கள், மூன்று பேர் பெண்கள். எனது தகப்பனாரின் தந்தை பெயர் தெரியாது. எனது தகப்பனாரின் தந்தைக்கு என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது. என் உடன்பிறந்தவர்கள் மூன்று பேர். அதில் ஒரு ஆணும், இரண்டு பெண்களும் அடங்குவர். என்னுடன் பிறந்தவர்கள் அனைவரையும் வழக்கின் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன். எனது தகப்பனார் இறந்து சுமார் 19 ஆண்டுகள் ஆகிறது.

2. எனது தகப்பனாருடன் பிறந்தவர்கள் அவர்களுக்குள் பாகம் செய்து கொண்டு அதனை பதிவு செய்து கொண்டார்கள். எனது தகப்பனாருடன் பிறந்தவர்களுக்குள் பாகம் செய்தபோது வழக்கு 1,2 இலக்க சொத்துக்கள் பாகத்தில் சேர்க்கப்படவில்லை. எனது தகப்பனாருடன் பிறந்தவர்கள் பாகம் செய்துகொண்டார்கள் என்பதை காட்டுவதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு 1,2 இலக்க சொத்துக்கள் எனது தாயார் கனகாம்பாவால் கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி கிரய சொத்துக்களின் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்பது தெரியாது. வழக்கு 1,2 இலக்க சொத்துக்கள் எனது தாயாரின் சுய சம்பாத்தியத்தினால் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் எனது தகப்பனாரின் சம்பாத்தியத்தையும் சேர்ந்துதான் 1,2 இலக்க சொத்துக்களை கிரயமாக வாங்கினார்கள். எனது தகப்பனாரின் சம்பாதியத்தினையும் சேர்த்து கிரயம் வாங்கப்பட்டிருந்தால் கிரய ஆவணத்தில் எனது தகப்பனாரின் பெயரும் சேர்க்கப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

3. எனது சகோதரி 3ம் பிரதிவாதி கவிதாவிற்கு கோயமுத்தூரில் திருமணம் ஆகியுள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் 3ம் பிரதிவாதிக்கு திருமணமானது. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 3ம் பிரதிவாதிக்கு மட்டுமே திருமணம் ஆகாமல் இருந்தது. நான் எனது வீட்டிற்கு மூத்த மகள் ஆவேன். எனக்கும் எனது தங்கை 2ம் பிரதிவாதி கலைச்செல்விக்கும் நல்லபடியாக சீர்செய்து திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் அந்த சமயத்தில் எனது தகப்பனார் மிகுந்த சிரமப்பட்டதால் எங்களுக்கு நல்லபடியாக சீர் செய்யவில்லை. எங்களது வீட்டில் எனக்குதான் முதலில் சுபநிகழ்ச்சி நடந்தது. எனது திருமணம் எங்கள் வீட்டில் முதல் திருமணம் என்பதால் எனக்கு அதிகமான நகைகள் போட்டு நல்லபடியாக சீர்செய்து திருமணம் செய்துகொடுத்தார்கள் என்றால் சரியல்ல நல்லபடியாக சீர்செய்யவில்லை. 3ம் பிரதிவாதிக்கு திருமணமாவதற்கு முன்பே 1ம் பிரதிவாதி அவரது பெயரில் சொத்துக்களை இனாம் செட்டிமெண்ட் செய்து கொடுத்தார். மேற்படி விபரம் அந்த சமயத்திலேயே எனக்கு தெரியும். 3ம் பிரதிவாதிக்கு இனாம்செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த சமயத்தில் எனது தகப்பனார் உயிருடன் இல்லை என்றாலும் எனது தாயார் உடல்நலக்குறைவுடன் காணப்பட்டார் என்பதாலும் 3ம் பிரதிவாதியின் பாதுகாப்பிற்காக இனாம்செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கு திருமணமாகி பத்து ஆண்டுகள் இருக்கும்.

4. 3ம்பிரதிவாதி தனக்கு இனாம்செட்டில்மெண்ட் மூலமாக கிடைத்த சொத்தினை தனது திருமணத்திற்கு பிறகு 5ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார். 5ம் பிரதிவாதி கவிதாவிற்கு 3ம் பிரதிவாதி வழக்கு 1,2 இலக்க சொத்துக்களை சேர்ந்தாற்போல் விற்பனை செய்துவிட்டார். மேற்படி விபரம் 5ம் பிரதிவாதி எனது வீட்டிற்கு வந்து சொன்னதன்பேரில் எனக்கு தெரியவந்தது. 6ம் பிரதிவாதி ராமசாமி ஊரில் பஞ்சாயத்துகளுக்கு செல்வார். எனது சகோதரரான 4ம் பிரதிவாதி கிருஷ்ணகுமார் தற்போது எனக்கு உறவாகவும் நட்பாகவும் இருந்து வருகிறார். 6ம் பிரதிவாதி மூலம் 4ம் பிரதிவாதி வழக்கு சொத்து குறித்து பஞ்சாயத்து ஏதும் பேசினாரா என்றால் பேசவில்லை. 4ம் பிரதிவாதி கிருஷ்ணகுமார் 3ம் பிரதிவாதிக்கு அவரது தாயாரால் இனாம்செட்டில்மெண்ட் செய்துகொடுக்கப்பட்ட சொத்தை 5ம் பிரதிவாதி கவிதாவுக்கு எழுதிக்கொடுத்த பின்னர் அதே சொத்து 4ம் பிரதிவாதியால் 6ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி ராமசாமி 4ம் பிரதிவாதி கிருஷ்ணகுமாரிடம் சொத்து பற்றி பஞ்சாயத்து பேசியபோது சொத்தினை தனது பெயருக்கு எழுதிவைத்தால் அதனை தான்

பார்த்துக்கொள்வதாக 6ம் பிரதிவாதி சொன்னதன்பேரிலேயே 4ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு 1,2 இலக்க சொத்துக்களை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான்.

5. எங்கள் ஊரில் சொத்து சம்மந்தமான பிரச்சனை நடக்கும்போது பஞ்சாயத்து செய்யும் ராமசாமி பெயரில் பிரச்சனைக்குரிய சொத்தினை எழுதி வைப்பது வழக்கம் என்றால் சரிதான். பிரமாணப்பத்திரிக்கையில் வழக்கு 1,2 இலக்க சொத்துக்களை எனது சித்தப்பா தங்கராசு, செல்வராசு, எனது தந்தையார் உள்ளிட்ட பொதுக்குடும்பத்திற்காக எனது தாயார் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாருக்கும் எனது சித்தப்பா தங்கராசு, செல்வராசு ஆகியோருக்கும் இடையே வாய்மொழியாக ஏற்பட்ட பாகத்தில் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 30.08.1984 அன்று எனது தகப்பனாருக்கும் அவரது சகோதரர்களுக்கும் இடையே பாகம் ஏற்பட்டது தொடர்பாக பாக முச்சலிகா ஒன்று ஏற்பட்டதாக சொல்வது உண்மையல்ல என்று சொன்னாலும் அவ்வாறு பாகமுச்சலிகா ஏற்படுத்தப்பட்டிருந்தால் அதனை சான்றாவணமாக தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல.

6. குடும்ப சொத்துக்கள் அனைத்தும் என் சித்தப்பா தங்கராசு மற்றும் செல்வராசு ஆகியோருக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லியிருப்பது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தையார் பெயரிலும் தாயார் பெயரிலும் வாங்கப்பட்ட சொத்துக்கள் என எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியிருப்பது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை நானும் எனது சகோதர சகோதரிகளும் அனுபவம் செய்து வந்ததாகவும் வாரிசு அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் எனக்கு உரிமைப்பட்டது என்று நிரூபண வாக்குமூலத்தில் கூறியிருப்பது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு 6/25 பாகம் உள்ளது என சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. 1,2 இலக்க சொத்துக்களை 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்வதற்கு உரிமையில்லை என்று தவறாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு 1 வது இலக்க சொத்தில் எனது தாயாருக்கு முழுமையான உரிமையில்லை என்று சொல்லியிருப்பது சரியல்ல.

7. 1ம் பிரதிவாதி 3ம்பிரதிவாதிக்கு எழுதிவைத்துள்ள இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் செல்லக்கூடியது அல்ல என்ற பரிகாரத்தினை நான் கேட்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதி கவிதாவிற்கு

எழுதிவைத்துள்ள கிரய ஆவணம் செல்லக்கூடியது அல்ல என்ற பரிகாரத்தினை நான் கேட்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. எனது சித்தப்பா தங்கராசு, செல்வராசு ஆகியோரை வழக்கு தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கினை 6ம் பிரதிவாதியின் தூண்டுதல் மற்றும் வற்புறுத்துதலின் காரணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னாலும் சரியல்ல.